## 5

# இல்லத்தில் கிறிஸ்தவப் பெண்

*“குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்?*
*அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது.*
*.................................................................*
*அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்;*
*அவள் புருஷனும் அவளைப் பார்த்து:*
*‘அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு;*
*நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள்*
*என்று அவளைப் புகழுகிறான்’ ” (நீதிமொழிகள் 31:10, 28, 29).*

குடும்பத்தில் உள்ள தேவபக்திநிறைந்த ஒரு பெண், நீதிமொழிகளின் புத்தகத்தில் அழகுமிக்கவகையில் விவரிக்கப்படுகின்றாள். அவள் தனது கணவனால் நம்பப்படுகின்றாள், அவனை நன்கு நடத்துகின்றாள் மற்றும் குடும்பத்தைப் பராமரிப்பதில் அவனுக்கு உதவுகின்றாள். அவளது இருதய மானது, அவளது கணவனும் பிள்ளைகளும் நன்கு கவனிக்கப்படுதல் மீது நிலைகொண்டுள்ளது. வர்த்தக விஷயங்களில் அவள் திறமைசாலியாய் இருக்கின்றாள். ஏழைகள்மீது அவள் பரிவிரக்கம் கொள்கின்றாள், அவர்களுக்குத் தேவையானவற்றை அளிக்க அவள் உதவுகின்றாள். அவள் ஞானமாய்ப் பேசுகின்றாள். அவள் தனது குடும்ப உறுப்பினர்களிடத்தில் காண்பிக்கின்ற அன்பின் வகை காரணமாக, அவர்கள் யாவரும் அவளைப்பற்றி நன்கு புகழ்ந்துபேசிப் பாராட்டுகின்றனர். அவளது சுய உழைப்பே அவளது புகழைப் பாடுகிறது (நீதிமொழிகள் 31:10-31). “சௌந்தரியம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்” (நீதிமொழிகள் 31:30).

ஒரு நல்ல பெண்மணி, சமூகத்தில் மாபெரும் மதிப்புடையவளாய் இருக்கின்றாள் மற்றும் அவள் குடும்பத்தில் நல்லவற்றின்மீது செல்வாக்குச் செலுத்துபவளாகவும் இருக்கின்றாள். “மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகின்றான்; கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்கிறான்” (நீதிமொழிகள் 18:22). “நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மானத்தைக் காப்பாள்” (நீதிமொழிகள் 11:6அ). “வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்திரம்; புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு” (நீதிமொழிகள் 19:14).

பல ஆண்களுக்கும் பல குடும்பங்களுக்கும் பெண்களே பலமாக அல்லது வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்துள்ளனர். “குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்” (நீதிமொழிகள் 12:4); என்றும், “புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ

அதை இடித்துப்போடுகிறாள்" (நீதிமொழிகள் 14:1) என்றும் நாம் வாசிக்கின்றோம்.

## ஒரு தாய் என்ற வகையில்

குடும்பத்தில் மனைவியின் செல்வாக்கை மிகையாக மதிப்பிட முடியாது. அவளது வாழ்வானது குடும்பத்தில் மாபெரும் செயல் தாக்கத்தைக் கொண்டுள்ளது; பொதுவாக அவள் பிள்ளைகளுடன் அதிக நேரத்தைச் செலவிடும் பெற்றோராக இருக்கின்றாள். பிள்ளைகள் செல்லும் திசையானது பெரும்பாலும் அவர்களின் தாயினுடைய வாழ்வைப் பிரதிபலிக்கிறது.

பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதற்கென்று தந்தையர்களுக்கு விசேஷித்த புத்திமதி தரப்பட்டுள்ளது. பவுல், "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (எபேசியர் 6:4) என்று எழுதினார். இது ஆண்கள் சில நேரங்களில் இந்தக் கடமையைப் புறக்கணிக்கும் வேளையில், பெண்கள் இயல்பாகவே தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்குகின்றனர் என்பதை மறைமுகமாய் உணர்த்தலாம். இருப்பினும், நிறைவான பொறுப்பு என்பது தந்தையர்களின் தோள்களிலேயே இருக்கிறது. இதற்கு ஒரு உதாரணமானது, ஏலி தமது குமாரர்களைத் திருத்தாததினால் அவரைக் கண்டனம் பண்ணியதில் காணப்படுகிறது (1 சாமுவேல் 2:29, 30; 3:13, 14). தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தல் என்பது, ஆபிரகாம் தமது பிள்ளைகளையும் தமது வீட்டாரையும் தேவனுடைய வழியில் பயிற்றுவித்தல் என்ற அவசியத்துடன் இணைக்கப்பட்டிருந்தது (ஆதியாகமம் 18:19).

குடும்பத்தில் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதில் தாய்மார்கள் முக்கியமான பொறுப்புக் கொண்டுள்ளனர். யோசேப்பு அல்ல, ஆனால் மரியாளே, இயேசுவை அவர் எருசலேமிலேயே தங்கியிருந்ததற்காகக் கடிந்துகொண்டாள்: " 'மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே' " (லூக்கா 2:48ஆ). தீமோத்தேயுவின் விசுவாசத்தின்மீது செல்வாக்குச் செலுத்தியிருந்தவர்கள் பற்றிப் பவுல் பின்வருமாறு குறிப்பிட்டார்: "உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால் … அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" (2 தீமோத்தேயு 1:5). மாபெரும் பெண்கள் தனிச்சிறப்பு வாய்ந்த பிள்ளைகளை வளர்த்திருக்கின்றனர்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியக் கடன்பட்டுள்ளனர். தேவன் இஸ்ரவேல் மக்களுடன் ஏற்படுத்திக்கொண்டிருந்த உடன்படிக்கையில், பிள்ளைகள் தங்கள் தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களைக் கனம்பண்ணவேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார் (யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16). சாலொமோன் தனது குமாரனுக்குப் பின்வருமாறு அறிவுரை அளித்தார்:

*என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தை தள்ளாதே (நீதிமொழிகள் 1:8; 6:20).*

*உன்னைப்பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே (நீதிமொழிகள் 23:22).*

*நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள் (நீதிமொழிகள் 23:24, 25).*

புதிய ஏற்பாடு இந்த ஆய்வுக்கருத்தை எடுத்தாளுகிறது. உடன்படிக்கையில் இருந்து மேற்கோள் காண்பித்த பவுல், "பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்" என்று கூறிய பின்பு (எபேசியர் 6:1), அவர்கள் தங்கள் தந்தையர்களையும் தாய்மார்களையும் கனம்பண்ண வேண்டும் (எபேசியர் 6:3) என்று கூறினார். மேலும் அவர், "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" என்றும் கூறினார் (கொலோசெயர் 3:20). "பெற்றார்" என்ற வார்த்தையானது தந்தையையும் தாயையும் உள்ளடக்குவதால், பிள்ளைகள் தங்கள் தந்தைக்கும் தாய்க்கும் கீழ்ப்படியும்படி கட்டளையிடப்பட்டுள்ளனர். தாய்மார்களும் தந்தையர்களும் தங்களின் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கின்றனர். தங்கள் தாய்மார்களுக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருக்கின்றனர்.

துன்மார்க்கமான புறஜாதி சமூகத்தினர், தாய்மார்களுக்குக் கீழ்ப்படியாமையை உள்ளடக்கியிருக்கும், தங்கள் பெற்றோருக்கு மதிப்பளிக்காமலும் கீழ்ப்படியாமலும் இருப்பதாகச் சித்தரித்தார். தங்கள் பெற்றோர்களை அவ்வாறு நடத்துகின்றவர்கள், கொலை, பகை, மற்றும் கேடான சிந்தை கொண்டவர்களுடனும் (ரோமர் 1:28-31), தற்பிரியர், வீம்புக்காரர், நல்லோரைப் பகைக்கிறவர்கள் மற்றும் துரோகிகள் (2 தீமோத்தேயு 3:2-4) ஆகியோருடன் பட்டியலிடப்பட்டுள்ளனர். சிலர் தங்கள் தந்தையர்கள் மற்றும் தாய்மார்கள் ஆகியோரைக் கொலை செய்வதாகக்கூடக் கூறப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 1:9). [தமிழ் வேதாகமத்தில் இவ்வசனம், "தாய்தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும்" என்று கூறுகிறது.]

மோசேயின் பிரமாணத்தின்கீழ், தந்தையர்கள் அல்லது தாய்மார்கள்மீது விரோதத்தைக் காண்பிக்கும் பிள்ளைகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களாய் இருந்தனர். லேவியராகமம் 20:9ம் வசனம், "தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக" (உபாகமம்

22:18-21ஐயும் காணவும்) என்று கூறுகிறது.

தாய்மார்களும் பொதுவாகப் பெண்களும், மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். பவுல் தீமோத்தேயுவுக்கு, முதிர்வயதுள்ள பெண்களை அவரது தாயைப்போல மதிக்க வேண்டும் என்றும், இளம் பெண்களை எல்லாக் கற்புடனும் சகோதரிகளாக மதிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார் (1 தீமோத்தேயு 5:2). இது பெண்களைப் பற்றியும், தாய் மார்களுக்கும் எல்லாப்பெண்களுக்கும் தரப்பட வேண்டிய கனத்தைப் பற்றியும் பவுலின் எண்ணப்போக்கைக் காண்பிக்கிறது. இயேசுவுக்காக வாழும் பெண்கள் உயர்ந்த மதிப்புக்குத் தகுதியானவர்கள் என்று புதிய ஏற்பாடு எடுத்துரைக்கிறது.

## ஒரு மனைவி என்ற வகையில்

முதிர் வயதுள்ள பெண்கள் இளம்பெண்களுக்குத் தரவேண்டிய அறிவுறுத்துதல், குடும்பத்தில் மனைவியின் முக்கியமான இடத்தை வெளிப்படுத்துகிறது:

> முதிர் வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், ... தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ள வர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு (தீத்து 2:3-5).

இந்த அறிவுறுத்துதல்கள், இளம் மனைவியர்கள் குடும்பத்தில் நல்ல தாய் மார்களாயிருக்க வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. அவர்கள் கணவர்மீது அன்புகூருபவர்களாய் (Gk.: *philandrous*) மற்றும் பிள்ளைகளிடம் அன்புகூருபவர்களாய் (Gk.: *philoteknous*) இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் கணவர்கள் மற்றும் பிள்ளைகளிடத்தில் கொண்டிருக்க வேண்டிய அன்பு *agape* "அன்பாக" அல்ல ஆனால் *phile* "அன்பாக" இருக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தையானது, ஒரு பெண் தனது கணவர் மீதும் தனது பிள்ளைகள் மீதும் கொண்டிருக்க வேண்டிய உணர்வுப்பூர்வ மான நட்புறவு இணைப்பை வெளிப்படுத்தப் பயன்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட அன்பு போதிக்கப்படவும் பற்றிக்கொள்ளப்படவும் முடியும் என்பது தெளிவு.

மனைவியர்கள் *oikourous* ஆக, நேரடி அர்த்தத்தில் ''வீட்டில் தரித்திருப்பவர்களாக'' இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர், இச்சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் தீத்து 2:5ல் மாத்திரம் காணப்படுகிறது. பெண்களுக்குக் கூறப்பட்ட - தங்கள் குடும்பங்களை ஆதரிக்க வேண்டும் என்று பொறுப்புடைய கணவர்களுக்குக் கூறப்பட்டதற்கு நேரெதிரான - கூற்று, அவர்கள் குடும்பத்தைக் காக்க

வேண்டும் என்பதாக உள்ளது. இது எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று வசனம் கூறுவதில்லை; இருப்பினும், குணசாலியான பெண் பற்றிய விவரிப்பானது, அவளது செயல்பாடு குடும்பத்துடன் வரை யறுக்கப்பட்டு விடுவதில்லை என்று சுட்டிக்காண்பிக்கிறது (நீதிமொழிகள் 31:14, 16, 24). நடபடிகள் 18:18ல் பிரிசில்லாளின் பயணங்கள் மற்றும் செயல்பாடுகள், பெண்கள் குடும்பத்துடன் மாத்திரம் தனிப்பட்ட வகையில் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததில்லை என்பதையும் சுட்டிக்காண்பிக்கிறது.

## முடிவுரை

குடும்பத்தில் கிறிஸ்தவப் பெண்ணின் முக்கியத்துவத்தை மிகையாக வலியுறுத்த முடியாது. அவள் ஒரு ஆணினால் அளிக்க முடியாத ஒரு பெண்ணின் தொடுகையைத் தருகின்றாள். அவளது பரிவான கவனிப்பும், அவளது புரிந்துகொள்ளும் வழிகளும், அவளது அன்பான அக்கறையும், மற்றும் அவளது சாந்தமான ஆவியும் வேறெவரும் தர இயலாதவைகளாய் இருக்கின்றன. பிள்ளைகள் தங்கள் பலத்திற்காகவும் உற்சாகத்திற்காகவும், அறிவுரைக்காகவும், உதவிக்காகவும், குடும்பத்தில் ஒரு ஆணினால் பல வேளைகளில் கவனிக்காமல் விடப்படுகின்ற சிறிய விபரங்கள் யாவற்றிற்காகவும் அவளைக் கண்ணோக்குகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, அவள் தனது பிள்ளைகள், தேவனையும் தங்கள் தந்தையையும் மற்றும் அதிகாரத்துவத்தில் உள்ள யாவரையும் மதிக்கும்படிப் பயிற்றுவிக்கின்றாள். பிள்ளைகள் அவள் கூறுகின்றபடி மாத்திரமல்ல, ஆனால் அவளது ஒவ்வொரு அசைவு, உணர்வு வகை மற்றும் செயல்பாடு ஆகியவற்றின் மூலமாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். குடும்பத்தில் மனைவியானவள் தேவனுக்கு கவனம் நிறைந்த ஊழியத்தின் மூலமாக தனது கணவரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும், தேவனிடத்திலும் புகழ்ச்சியைப் பெறுவாள்.

---

# விதவைகளைப் பராமரித்தல்

கிறிஸ்தவர்கள் பெண்களின் விஷயத்தில் அக்கறை காண்பிக்க வேண்டும் என்றும், சில விஷயங்களில் ஆண்களைக் காட்டிலும் அதிக மாகப் பெண்கள் கவனிக்கப்பட வேண்டும் என்றும் புதிய ஏற்பாட்டின் போதனைகள் காண்பிக்கின்றன. மனைவியை இழந்த ஆண்களைப் பரா மரிக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை, ஆனால் விதவைகளுக்கு வேண்டியவற்றை அளித்தல் என்பது தொடக்ககால சபையின் அக்கறைக்குரிய விஷயமாக இருந்துள்ளது. நடபடிகள் 6:1-3ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்,

> அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப் படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர்கூட்டத்தை வரவழைத்து:

> *நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணைசெய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, "பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் ..." என்றார்கள் (1 தீமோத்தேயு 5:3, 16; யாக்கோபு 1:27ஐக் காணவும்).*

*சபையினால் உதவிபெறத் தகுதியானப் பெண், கிறிஸ்துவுக்கு மாபெரும் அர்ப்பணிப்பும் தேவபக்தியும் உள்ள பெண்ணாக இருக்க வேண்டும் என்று விவரிக்கப்படுகின்றாள். அவள் "தேவனுடத்தில் நம்பிக்கையுள்ளவளாய் இரவும் பகலும் வேண்டுதல்களிலும் ஜெபங்களிலும் நிலைத்திருப்பவளாய்" இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 5:5). முதிர் வயதுடைய விதவையானவள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால், அவளுக்கு உதவியளிக்கப்பட வேண்டும்:*

> *அறுபது வயதுக்குக் குறையாதவளும், ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி, பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி, உபத்திரவப் படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக்குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தால், அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் (1 தீமோத்தேயு 5:9, 10).*

*இந்த இயல்புடைய பெண்கள் எந்த சமூகத்திலும் தனிப்பட்ட வகையில் உயர்வாக மதிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட பெண்கள், இயேசுவின் போதனையினுடைய உற்பத்திப்பொருளாய் இருக்கின்றனர், அது சமுதாயத்தில் பெண்களின் நிலைப்பாட்டை உயர்த்தியதுடன், வேறு எந்த போதனையினாலும் கொண்டுவரக்கூடியதைவிட அதிகமான மாண்புமிக்க ஆவிக்குரிய பண்புகளுக்குப் பெண்களை உயர்த்தியுள்ளது.*